1982 மார்ச் 15]

வழங்கப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா? விரைவில் அவர்களுக்கு லைசன்ஸ் வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருட்டுத்தனமாக சுண்ணாம்புக் கற்கள் எடுத்துக்கொண்டு போவது பற்றித்தான் கேள்வி. பல பேர்கள் மனு போட்டிருக்கிறார்கள். குறிப்பாக யாருடைய மனு என்று கேட்டால், அதற்கு பதில் சொல்ல முடியும், ஆனால், மொத்தம் வந்திருக்கக்கூடிய மனுக்கள், அவைகளின் தகுதிக் கேற்ப பரிசீலனை செய்யப்பட்டு, அவர்களுக்கு லைசன்ஸ் வழங்கப்படும்.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலை அரசே ஏற்று நடத்தினால், லாபகரமாக இருக்கும் என்பது அரசுக்குத் தெரியுமா? எனவே, இதை அரசே விரைவில் ஏற்று நடத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பரிசீலனை இப்போது ஏதும் இல்லை.

தருமபுரியில் நூற்பாலை ஏற்படுத்துதல்.

*வினா எண் 508— **திரு. எஸ். அரங்கநாதன்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தருமபுரியில் அரசு சார்பாக ஸ்பின்னிங் மில் ஏற்படுத்த செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். தர்மபுரி மாவட்டத்தில் பின்தங்கிய பகுதியில் 25,000 கதிர்களைக் கொண்ட ஒரு கூட்டுறவு நூற்பாலை சுமார் 7 கோடி அளவில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், 1982-83 ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த ஆலை நிறுவப்பட்டு, சுமார் 1,000 பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் ஏற்படக்கூடிய இந்த ஸ்பின்னிங் மில், எந்த இடத்தில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது ? அப்படி யானால், அந்த மில் உற்பத்தி செய்ய, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து எப்போது முதல் உற்பத்தி தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்ற விவரங்களை எல்லாம் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்து, இப்போது அரசுக்கு வந்திருக்கிறது. அரசினுடைய முடிவு வெகு விரை விலே அறிவிக்கப்பட இருக்கிறது. 1982-83-லே இது துவங்கப் பட்டு, 1984 ஆம் ஆண்டிலே உற்பத்தியைத் துவக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

விழுப்புரத்தில் தொழிற்பேட்டை அமைத்தல்

*வினா எண். 509—திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா:—

தமிழ்நாடு அரசு நிறுவனம் (Sipcob) தென்னாற்காடு ஜில்லாவில் தொழில் மையம் (Industrial Centre) ஏற் படுத்தப்போவதாக அறிவித்தபடி தொழிற்பேட்டையை விழுப் புரத்தில் நிறுவ அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம் கடலூருக்கு அருகில் சுமார் 500 ஏக்கர் பரப்பில் தொழில் இணையம் ஒன்றை அமைத்து, ரசாயனத் தொழில்களை ஊக்கு விக்க அரசு தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரத்தில் சாலை போக்குவரத்து வசதி, ரயில் போக்குவரத்து வசதி, மின்சாரம், தொலைபேசி தொடர்பு இவ்வளவும் சிறந்த அளவில் இருக்கின்ற காரணத்தினால், அங்கே விழுப்புரத்திலே ஒரு தொழிற்பேட்டை அமைத்தால், எல்லாவிதத்திலும் உபயோகமாக இருக்கும் என்பது அரசுக்குத் தெரியுமா ? எனவே அங்கே வேறு ஒரு தொழிற் பேட்டையை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கடலூர் அருகே சிப்காட் காம்ப்ளெக்ஸ் ஆரம்பிக்கப்படுவது பற்றியது. மாண்புமிகு